குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# கைதியான தானியேல்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Jonathan Hay

தழுவியவர்: Mary-Anne S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

தானியேலும் அவனுடைய மூன்று நண்பர்களும் இஸ்ரவேலிலே வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் வலிமை மிகுந்த ஒரு ராஜா அவர்களுடைய தேசத்திற்கு வந்து புத்திசாலியான இளைஞர்களையெல்லாம் தன்னுடைய தேசத்திற்கு கூட்டிச்சென்றான். அந்த ராஜா ஒரு நீளப்பெயரையுடையவன். நேபுகாத்நேச்சார். தூரமான பாபிலோன் என்று அழைக்கப்பட்ட தேசத்தில் அவன் வாழ்ந்து வந்தான்.



பாபிலோனிலே அந்த வாலிபர்கள் நன்றாக கவனிக்கப்பட்டார்கள். உலகத்தின் நாடுகள் அனைத்திலிருந்தும் சிறந்த மற்றும் பிரகாசமான வாலிபப் பிள்ளைகளை ராஜா தெரிந்தெடுத்திருந்தான். அவன் அவர்களுக்கு பாபிலோனிய பாஷையிலே பயிற்சி கொடுத்து தன்னுடைய ஊழியக்காரர்களாய் இராஜ்ஜியத்தை ஆளும்படி தனக்கு உதவி செய்ய திட்டமிட்டிருந்தான்.



இவர்களுடைய உணவும்கூட அருமையாயிருந்தது. ராஜா எதை சாப்பிட்டாரோ அதையே அந்த வாலிபர்களும் சாப்பிட்டார்கள். தானியேலும் அவனுடைய நண்பர்களும் அந்த உணவை சாப்பிட விரும்பவில்லை. ஏனெனில் அவைகள் தவறான தேவர்களுக்கு படைக்கப்பட்டவைகளாயிருந்தன.



தன்னுடைய தேவனுக்கு எதிராக எந்த காரியங்களையும் செய்யக்கூடாது என்று தானியேல் தீர்மானம் பண்ணியிருந்தான். இஸ்ரவேலின் தேவன் அவருடைய ஜனங்களுக்கு கட்டளையிட்டது என்னவென்றால் விக்கிரகங்களோடும், தவறான தேவர்களோடும் ஒன்றும் செய்யக்கூடாது என்பதாக.



தங்களுடைய பயிற்சிக்கு பொறுப்பானவனிடத்தில் தானியேல் ராஜாவின் உணவை சாப்பிடாமலிருக்க அனுமதி கேட்டிருந்தான். ஒரு வேளை ராஜா அதை கண்டுபிடித்தால், மிகவும் கோபப்படுவான். ஆனால் தேவனோ தானியேலை அந்த மனிதனுக்கு பிடித்த ஒரு மனிதனாக மாற்றினார்.



தானியேலையும், அவனுடைய நண்பர்களையும் ஒரு பரிசோதனை செய்ய ஒப்புக் கொண்டான். பத்து நாட்களுக்கு அவர்கள் வெறும் காய்கறிகளை மற்றும் தண்ணீர் குடிப்பர். பத்து நாட்களுக்குப்பின் ராஜாவின் உணவை அருந்திய மற்ற எல்லா வாலிபர்களைப் பார்க்கிலும் தானியேலும் அவனுடைய நண்பர்களும் மிகவும் ஆரோக்கியமாக காணப்பட்டனர். ஆகையால் அவர்கள் தொடர்ந்து காய்கறிகளையும், தண்ணீரையும் சாப்பிட அனுமதிக்கப்பட்டனர்.



அந்த வாலிபர்கள் தேவனை கனம்பண்ணீனார்கள். தேவன் அவர்களை கனம்பண்ணினார். அவர்கள் கற்றுக்கொண்ட காரியங்களில் தேவன் அறிவையும், திறமையையும் கொடுத்தார், மற்றும் தானியேலுக்கு தரிசனங்களையும், சொப்பனங்களையும் புரிந்து கொள்ள ஞானத்தைக்கொடுத்தார்.





பாபிலோனிலே மூன்று வருடங்கள் படித்தபின், எல்லா வாலிபர்களும் நேபுகாத்நேச்சார் ராஜாவிடம் நிறுத்தப்பட்டனர். அவர்கள் எல்லோரிலும் மிகவும் திறமைசாலிகளாக ராஜா தானியேலையும், அவனுடைய மூன்று நண்பர்களையும் தெரிந்தெடுத்தான்.



உண்மையிலே, ராஜா
கண்டுபிடித்தது என்னவென்றால்
தன்னுடைய ராஜ்ஜியத்திலுள்ள
ஞானவான்களைப்பார்க்கிலும்
தானியேல் அதிக
ஞானமுள்ளவனாக
இருந்தான் என்பதாக.

ஒரு இரவு, ராஜா ஒரு கெட்ட கனவு ஒன்று கண்டான். அவன் மந்திரவாதிகள்,ஜோசியர்கள், சூனியக்காரர்கள் எல்லோரையும் கூப்பிட்டு தன் முன் நிற்கசொன்னான். "நான் ஒரு கனவு கண்டேன், என்னுடைய ஆவி அந்த கனவை புரிந்துகொள்ள ஆர்வத்துடன் இருக்கிறது."



அப்பொழுது ஞானவான்கள் சொன்னார்கள், "ஓ ராஜாவே, நீர் என்றும் வாழ்வீராக! உம்முடைய கனவை அடியார்களுக்குச் சொல்லும், மற்றும் நாங்கள் அதின் அர்த்தத்தை சொல்லுவோம் என்றார்கள்."



ராஜா பதில் சொன்னது, "அப்படியல்ல!
நான் என்ன கனவு கண்டேனென்றும்
மற்றும் அதின் அர்த்தத்தையும்
நீங்கள் சொல்ல வேண்டும்.
அப்படியில்லையென்றால்,
நீங்கள் எல்லாரும்
துண்டித்துப்போடப்படுவீர்கள்,
மற்றும் உங்கள் வீடுகள்
எருக்களமாக்கப்படும்!



ஆனால் அந்த கனவையும் அதின் அர்த்தத்தையும் சொல்வீர்களானால், ராஜா தொடர்ந்து சொன்னது, நீங்கள் வெகுமதிகளையும், பரிசுகளையும், மற்றும் என்னிடத்தில் கனத்தையும் பெறுவீர்கள்." நிச்சையமாக ஞானவான்கள் யாரும் ராஜாவின் கனவை சொல்லமுடியவில்லை.



ராஜாவின் ஞானவான்கள் ராஜாவினிடத்தில் சொன்னது. "ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை.  தேவர்களால் மாத்திரமே இதைச்செய்ய முடியும், ஆனால் அவர்கள் பூமியிலே வாழவில்லை, ராஜாவுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று."



"பாபிலோனிலுள்ள ஞானவான்கள் எல்லோரையும் அழித்துப்போடுங்கள்," என்று அவன் கட்டளையிட்டான்.



தானியேலினிடத்தில் போர்வீரர்கள் வந்த போது, ராஜாவின் தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே தானியேல் சொன்னது. "எதற்காக ராஜா எல்லா ஞானவான் களையும் அழிக்கிறார்?" பின்பு என்ன நடந்தது என்பதை ஆரியோகு தானியேலிடம் சொன்னான். தானியேல் ராஜாவை பார்க்கச் சென்றான். தான் கனவின் அர்த்தத்தை சொல்லும்படி ராஜாவிடம் கொஞ்ச காலம் அவகாசம் கேட்டான்.



பின்பு தானியேல் வீட்டிற்குச்
சென்று, தன்னுடைய
நண்பர்களான சாத்ராக், மேஷாக்,
ஆபேத்நேகோ என்பவர்களிடம்
எல்லாவற்றையும் சொன்னான்.



தானியேலுக்கு கனவு என்னவென்றும், அதினுடைய அர்த்தம் என்னவென்றும் தெரியவில்லை என்றாலும் எல்லாவற்றையும் தெரிந்த ஒருவரை அவனுக்குத் தெரியும். அவர் யாரென்றால் தேவன். ஆகையால் தானியேலும், அவனுடைய நண்பர்களும் ஜெபித்தார்கள்.



தேவன் தானியேலுக்கு கனவையும்,
அதினுடைய அர்த்தத்தையும் வெளிப்படுத்தினார்.
தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்து
சொன்னது என்னவென்றால், "தேவனுடைய நாமத்துக்கு
என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம்
உண்டாவதாக. ஞானமும், வல்லமையும்
அவருக்கே
உரியது."



தானியேல் துரிதமாக ராஜாவினிடத்தில் சென்று சொன்னது. "பரலோகத்தில் தேவன் இருக்கிறார் அவர் இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்."  ராஜா என்ன கனவு கண்டானென்றும், அதினுடைய அர்த்தம் என்னவென்றும் சொன்னான்.



ராஜா நேபுகாத்நேச்சார் கனவையும், அதின் அர்த்தத்தையும் கேட்ட போது, தானியேல் முன்பாக அவன் விழுந்து சொன்னது, "நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தின படியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருளை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறரார்!"



பின்பு ராஜா தானியேலை ஒரு பெரிய மனிதனாக ஏற்படுத்தி, அனேக வெகுமதிகளை கொடுத்தான். அவனை பாபிலோன் மாகாணத்திற்கு அதிபதியாகவும், பாபிலோனின் ஞானவான்களுக்கு தலைவனாகவும் ஏற்படுத்தினான்.



கைதியான தானியேல்

## தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

தானியேல் 1-2

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16